பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

11 11 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- இந்திய இளைஞர்களின் திறமையை பயன்படுத்திக் கொள்ள உலக நாடுகள் ஆர்வம் கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக திரு சஞ்ஜீவ் கன்னா இன்று பதவியேற்றுக் கொண்டார்.
- ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்கப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.
- உக்ரைன் போரை தீவிரப்படுத்தும் முயற்சிகளை கைவிடுமாறு அமெரிக்கா அதிபர் திரு டோனால்டு ட்டிரம்ப், ரஷ்ய அதிபரை கேட்டுக் கொண்டுள்ளார்.
- ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கிப்போட்டி பீகாரின் ராஜ்கீரில் இன்று தொடங்கியது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இந்திய இளைஞர்களின் திறமையை பயன்படுத்திக் கொள்ள உலக நாடுகள் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் **Vadtal-**ல் உள்ள ஸ்ரீ சுவாமிநாராயண் திருக்கோவிலின் 200-ஆவது ஆண்டுவிழா கொண்டாட்டங்களில் காணொலி வாயிலாக உரையாற்றிய பிரதமர், பிற நாடுகளில் பணியாற்றி வரும் இந்திய இளைஞர்கள் செயல்திறன் மிக்கவர்களாகவும், அறிவாற்றலில் சிறந்து விளங்குவதாகவும் குறிப்பிட்டார்.

ஸ்ரீ சுவாமி நாராயண் ஆலயத்தின் 200-வது ஆண்டு கொண்டாட்டத்தை சிறப்பிக்கும் வகையில் மத்திய அரசு 200 ரூபாய் வெள்ளி நாணயத்தையும், நினைவு அஞ்சல் தலையையும் வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த திருக்கோவில் மீது மக்கள் ஆன்மீக நம்பிக்கைக் கொண்டு வழிபட்டு வருவதாகத் தெரிவித்தார்.,

200 ஆண்டுகளுக்கும் மேலாக ஸ்ரீ சுவாமிநாராயண் திருக்கோவில் நாட்டின் கலாச்சாரத்தை ஒன்றியிருப்பதாக திரு நரேந்திரமோடி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

நாட்டுக்காக அரும்பணியாற்றிய தலைவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி புகழாரம் செலுத்தியுள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர் மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்த நாளையொட்டி பிரதமர் விடுத்துள்ள செய்தியில் நாட்டின் விடுதலைப் போராட்டத்துக்கு முக்கிய பங்காற்றியவர் என்றும், சிந்தனையாளர், எழுத்தாளர் என பன்முக தன்மை கொண்டவர் என்று புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

வளர்ச்சியடைந்த மற்றும் அதிகாரமிக்க இந்தியாவை உருவாக்குவதில் அவரின் தொலைநோக்குப் பார்வை இன்றும் நமக்கு ஊக்கம் அளிப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஆச்சாரியா கிருபாலினி-யின் பிறந்த நாளும் இன்று கொண்டாடப்படுவதையொட்டி பிரதமர் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காக அரும்பாடுபட்டவர் என்று குறிப்பிட்டுள்ளார்.,

நாட்டின் இறையாண்மையையும், ஒற்றுமையையும், மக்களுக்கு மனவலிமையையும் ஊட்டியவர் என்று அவர் கூறியுள்ளார்.

அவரின் ஜனநாயக மாண்புகளும், சமூகநீதிக் கொள்கையும் என்றம் போற்றத்தக்கவை என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மறைந்த மத்திய பிரதேச முன்னாள் அமைச்சர் சுந்தர்லால் பட்வா பிறந்த நாளையாட்டி பிரதமர் விடுத்துள்ள செய்தியில், தன்னலமற்ற சமூக சேவையை தமது வாழ்க்கை முழுவதும் கடைபிடித்தவர் என்றும், நாட்டை மேம்படுத்த அவர் ஆற்றிய அரும்பணிகள் நம் ஒவ்வொருவராலும் போற்றத்தக்கவை என்று கூறியுள்ளார்.

பிஜேபி இயக்கத்தின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணிகள் போற்றத்தக்கவை என்று திரு நரேந்திரமோடி தமது சமூக வலைளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

உச்சநீதிமன்றத்தின் 51-ஆவது தலைமை நீதிபதியாக திரு சஞ்ஜீவ் கன்னா இன்று பதவியேற்றுக் கொண்டார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்று நிகழச்சியில் அவருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பதவி பிரமாணம் செயதுவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கலந்து கலந்து கொண்டனர்.

தலைமை நீதிபதியாக பதவி வகித்து வந்த திரு டி ஒய் சந்திரசூட் ஓய்வுபெற்றதை அடுத்து, திரு சஞ்ஜீவ் கன்னா இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

[]<<<>>>[]

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்கப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

முதல்கட்டமாக 43 தொகுதிகளில் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதையொட்டி அரசியல் கட்சித் தலைவர்களும், பிரதிநிதிகளும், வேட்பாளர்களும் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, இன்று பிற்பகல் காணொலி காட்சி வாயிலாக, ஜார்கண்ட் மாநில பிஜேபி வாக்குச்சாவடி முகவர்கள் இடையே உரையாற்றவுள்ளார்.

பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா, அம்மாநில முன்னாள் முதலமைச்சர் திரு சம்பை சோரன், ஆகியோரும் இதில் பங்கேற்கின்றனர்.

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, சகத்ராபூர் மற்றும் பாங்கி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்கிறார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் இரண்டாவது கட்ட தேர்தல் வரும் 20-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதனிடையே மகாராஷ்டிராவிலும் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

இம்மாநிலத்தில் ஒரே கட்டமாக இம்மாதம் 20-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

உக்ரைன் போரை தீவிரப்படுத்தும் முயற்சிகளை கைவிடுமாறு ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினிடம் அமெரிக்காவின் புதிய அதிபர் திரு டோனால்டு ட்டிரம்ப் கேட்டுக் கொண்டுள்ளார்.

ரஷ்ய அதிபரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய திரு டோனால்டு ட்டிரம்ப், உக்ரைன் பிரச்சினைக்கு சமரச பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்று கூறினார்.

இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் இந்த போரினால் பதற்றமான சூழ்நிலை அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐரோப்பாவிலும் கணிசமான அளவு அமெரிக்க படைகள் உள்ளதை திரு ட்டிரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார்.

உக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கியுடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய திரு டோனால்டு ட்டிரம்ப், அமைதியையும், அரசியல் நிலைப்பாட்டையும் மீண்டும் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

29-வது ஐ நா பருவநிலை மாற்ற உச்சி மாநாடு அஸர் பைசானில் உள்ள **Baku** நகரில் இன்று தொடங்குகிறது.

இரண்டு வார காலம் நடைபெறவுள்ள இந்த உச்சி மாநாடு தொடர்பான கருத்தரங்கில் பருவநிலை மாற்றத்துக்கான நிதி முதலீடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது,

இந்திய உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்ட நாடுகள் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டில், பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தின் இலக்குகளை எட்டுவதற்கான செயல்பாடுகள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்படவுள்ளது,

பருவநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்வதற்கு போதிய நிதியை திரட்டுவது, தொழில்நுட்பம் மற்றும் எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்வது உள்ளிட்டவை குறித்தும் இதில் விவாதிக்கப்படவுள்ளது.

பருவநிலை மாற்றத்துக்கான நிதி கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிக்கு இந்தியா முக்கிய பங்காற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்குத் தேவையான நிதி உதவியை வழங்குவதற்கு ஏதுவாக சர்வதேச செலாவணி நிதியத்தின் தூதுக்குழுவினர் அடுத்த வாரத்தில் மூன்றாவது முறையாக ஆய்வு செய்யவுள்ளனர்.

சர்வதேச செலாவணி நிதியத்தின் மூத்த அதிகாரி திரு பீட்டர் **Vreuer** தலைமையில் இலங்கை வரும் இந்த தூதுக்குழுவினர் அந்நாட்டின் பொருளாதார கொள்கைகள், சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் ஏற்கனவே நிதியத்தோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்கின்றனர்.

இந்த ஆய்வுக்குப் பின் இலங்கைக்கு மூன்றாவது தவணை கடனுதவி விடுவிக்கப்படவுள்ளது.

இலங்கைக்கு உதவுவதற்காக ஏற்கனவே இரண்டு புள்ளி ஒன்பது பில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவிக்கு சர்வதேச செலாவணி நிதியம் ஒப்புதல் வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை பாரிமுனையில் 822 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள பல்நோக்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தை அவர் இன்று ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - சேகர்பாபு ) --- 48 செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இன்றும் நாளையும் கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடலோர ஆந்திர பிரதேசம், ஏனம் ராயலசீமா பகுதிகளில் நாளை கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் அது கூறியுள்ளது.

பஞ்சாப் மற்றும் ராஜஸ்தானின் வடகிழக்கு மாவட்டங்களில் ஆங்காங்கே அடுத்த இரண்டு நாட்களுக்கு கடுமையான பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஆசிய மகளிர் சாம்பியன் ஹாக்கிப்போட்டி பீகாரில் உள்ள ராஜ்கீரில் இன்று தொடங்கியது.

இம்மாதம் 20-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், நடப்பு சாம்பியன் இந்தியா, ஜப்பான், தென்கொரியா, சீனா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.

ஜப்பான் - கொரியா இடையேயான முதல் ஆட்டம் தற்போது நடைபெறுகிறது.

இன்று மாலை மணி 4-45-க்கு தொடங்க உள்ள போட்டியில் இந்தியா – மலேசியாவை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

வொய்ட் **Oaks** கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வீர் சோட்ராணி பட்டம் வென்றார்.,

கனடாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர் 11-6, 11-2, 11-9 என்ற செட் கணக்கில் கனடாவின் **Salah eltor gman-**யை வென்றார்.

**[]<<<>>>[]**